திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றப் பேரவை சார்பிலே ஐந்தாண்டிற்கு ஒருமுறை நியமிக்கப்படக்கூடிய குழுக்கள், மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, அவை உரிமைக் குழு உள்ளிட்ட 12 குழுக்கள் இதுவரையில் அறிவிக்கப்படவில்லை. மன்னிக்கவும். ஆண்டிற்கு ஒருமுறை நியமிக்கக்கூடிய மேற்படி குழுக்கள் இதுவரை அறிவிக்கப்படவில்லை. எனவே, அந்தக் குழுக்கள் அமைக்கப்படக்கூடிய நிலை என்ன என்பதை தங்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை தக்க நேரத்தில் நான் அறிவிப்பேன். (குறுக்கீடு). அதுகுறித்து அறிவிப்பேன். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

பிற்பகல் 4-35

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, O.A.P. விவாதத்தின்போது, நீங்கள் கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ** என்று சொன்னேன். ** என்பதை எடுத்துவிட்டு, தக்க பதிலை சொன்னார்கள் என்று பதிவுசெய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னபடி மாற்றிக்கொள்ளப்படுகிறது.

7. அறிவிப்பு

சட்டமன்றப் பத்திரிகையாளர்களுக்குப் பேனா, குறிப்பேடுகள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை செய்தியாளர்கள் மாட அனுமதிச் சீட்டு பெற்றுள்ள செய்தியாளர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அம்மா அவர்களின் ஆணையின்படி, சட்டமன்றப் பேரவைச் செயலகத்தால் வழங்கப்பெறும் பேனா மற்றும் குறிப்பேடுகள் சட்டமுன்வடிவு பிரிவு-2-லிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

8. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நாளை 2-9-2016 அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 2-9-2016 (வெள்ளிக்கிழமை) அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

நாளை, 2-9-2016 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (2-9-2016) வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4-35 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.